DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 38/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அபுதாகீர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 06.03.2023.

**( முதல் விசாரணை ):**

1. நான் உடுமலையில் வசித்து வருகிறேன். நான் சாவிக்கடை வைத்துள்ளேன். 10.2.2019 அன்று என் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று என் வீட்டை பூட்டிவிட்டு பொள்ளாச்சி சென்றுவிட்டு மறுநாள் காலை 9.00 மணிக்கு வந்து வீட்டை பார்த்தபோது வீட்டின் பூட்டு திறக்கப்பட்டிருந்தது. வீட்டில் பீரோவில் இருந்த நகைகள் காணவில்லை. அந்த பீரோவில் இருந்து 1 ¾ பவுன் நெக்லஸ் –1, கம்மல் மாட்டல் உடன்–1 செட்–1 பவுன் , இன்னொரு கம்மல் ¾ பவுன் – செட், இரண்டு கால் கால் மோதிரம் மேற்கண்ட தங்க நகைகள் காணாமல் போய் இருந்தது. அதன் மதிப்பு சுமார் ரூ.40,000/– ஆகம். அக்கம் பக்கம் விசாரித்து பார்த்தேன் பக்கத்து வீட்டை சேர்ந்த நந்தகோபால் தான் எடுத்தார் என்று தெரிய வந்தது. நகையை கொடு என்று கேட்டேன். பக்கத்துவீட்டை சேர்ந்தவர் என்பதால் புகார் கொடுக்கவில்லை, மேலும் நகைக்கு உண்டான பணத்தை கொடுக்குமாறு கேட்டேன் கொடுக்கவில்லை.

2. என்னுடைய நகையையும் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். முடிந்ததை பார்த்துக்கொள் என்னு சொல்லிவிட்டார்.

பின்பு இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

நான் புகார் கொடுத்தற்கு மறுநாள் இரவு 8.00 மணிக்கு போலிசார் நந்தகோபால் அடமானம் வைத்து நகைகளை மீட்டு என்னை வந்து அடையாளம் காட்ட சொல்லி நான் அடையாளம் காட்டினேன்.

2. மேற்படி நகைகளை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் காணாமல் போய் போலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள்( 1 ¾ பவுன் நெக்லஸ் –1, கம்மல் மாட்டல் உடன்–1 செட்–1 பவுன் , இன்னொரு கம்மல் ¾ பவுன் – செட், இரண்டு கால் கால் மோதிரம் மேற்கண்ட தங்க நகைகள்) போன்றவைகள் **அ.சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.